செ.வெ.எண்:68 நாள்: 26.06.2016

**புதக்கோட்டையில் புதிய அரசு மருத்துவ கல்லூரி கட்டுமான பணிகள் மிக விரைவாக நடைபெற்ற வருகின்றன - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் மருத்துவ கல்வித்துறையின் சார்பில் கட்டபட்டு வரும் புதிய மருத்து கல்லூரி கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (26-06-2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

புதிததாக கட்டபடும் மருத்துவ கல்லூரி கட்டுமான பணிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்நலத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு பொது மக்கள் நோயற்ற வாழ்வு வாழும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திற்கு ஒரு புதிய அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது





புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் புதிய மருத்துவ கல்லூரி கட்டடங்கள் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பல நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (26-06-2016) அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டார்.உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.

. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை வட்டம், முள்ளூர் கிராமத்தில் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்து கல்லூரி மருத்துவமனை கட்டபட்டு வருகிறது. இந்த அரசு மருத்து கல்லூரி மருத்துவமனையில் 7 கல்லூரி கட்டிடங்கள் ரூ.59.16 கோடி மதிப்பீட்டிலும், 11 மருத்துவமனை கட்டிடங்கள் ரூ.108.99 கோடி மதிப்பீட்டிலும், 13 குடியிருப்பு கட்டிடங்கள் ரூ.61.31 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 31 கட்டிடங்கள் ரூ.229.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

இதில் கல்லூரிக்கென கட்டப்படும் கட்டிடங்களில் கல்லூரி கட்டிடம், 2 விரிவுரையாளர் அரங்கம், நூலக கட்டிடம், கலையரங்க கட்டிடம், ஆய்வுகூடம், பட்டறை கட்டிடம் என கல்லூரி கட்டிடங்கள் மொத்தம் 20559.18 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. மருத்துவமனைக்கென கட்டப்படும் கட்டிடங்களில் 700 படுக்கைகள் கொண்ட கட்டிடம், வெளிநோயளிகள் பிரிவு, நிர்வாக பிரிவு, TSSD, பிணவறை, கட்டண கழிப்பிடம், நவீன சமயற்கூடம், சிற்றுண்டி கூடம், இருசக்கர வாகனம் நிறுத்தும் இடம், அவசர ஊர்தி

நிலையம், வங்கி மற்றும் தபால் நிலையம் ஆகிய பிரிவுகளை கொண்டு மொத்தம் 41195.60 ச.மீ கட்டப்பட்டு வருகிறது. குடியிருப்புக்கென கட்டப்படும் கட்டிடங்களில் ஆண், பெண் இருபாலருக்கென தனி தனி வடுதி கட்டிடம், முதல்வா் குடியிருப்பு, இருக்கை மருத்துவ அலுவலா் குடியிருப்பு, A,C,D பிரிவு குடியிருப்புகள், உடற்பயிற்சி கூடம், CRRI ஆண்,பெண் குடியிருப்பு, செவிலியா் ஆண்,பெண் குடியிருப்பு என மொத்தம் குடியிருப்பு கட்டிடங்கள் 22644.33 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. இதன் மூலம் புதிய அரசு மருத்துவ கல்லூரியின் மொத்த கட்டிடங்களின் பரப்பளவு 84399.11 ச.மீ ஆகும்.

மேலும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமான பொருட்களை பயன்படுத்தி தரமாகவும், விரைவாகவும் கட்டிமுடிக்க சம்பந்தப்பட்ட அலுவலா்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் குறிபிட்ட காலகெடுவிற்குள் மருத்துவமனை கட்டுமான பணிகளை முடித்து 2017-2018 கல்வி ஆண்டில் 150 மருத்துவ மாணவா்களை சோ்த்து மருத்துவ கல்லூரி செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சா் டாக்டா் சி.விஜயபாஸ்கா் அவா்கள் கூறினாா்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவா் அவா்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சா் அவா்கள் கந்தா்வக்கோட்டை வட்டம், துவாா் கிராமத்தில் 08.05.2016 அன்று கிணற்றில் விசவாயு தாக்கி இறந்த சௌந்தா்ராஜன், ரங்கசாமி, பெரம்மையா, அய்யாவு ஆகியோரின் வாரிசுதாரா்களான மனைவிகளுக்கு முதலமைச்சரின் உழவா் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒவ்வொருக்கும் தலா ரூ.1,02,500 மதிப்பில் 4,10,000 மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கியதுடன் மேலும் அக்குடும்பத்திற்கு தேவையான முதிகோா் உதவித்தொகை, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து அடிப்படை தேவைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றாா்.

இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினா்கள் திரு.கே. ஆறுமுகம் (கந்தா்வக்கோட்டை), திரு. இ.ஏ.ரெத்தினசபாபதி (அறந்தாங்கி), மாவட்ட ஊராட்சிக்குழு தலைவா் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழு தலைவா் திரு.சின்னப்பா, நகா்மன்றத் தலைவா் திரு.ராஜசேகரன், புதுக்கோட்டை சாா் ஆட்சியா் திரு.எஸ்.பி. அம்ரித்,இ.ஆ.ப., அரசு மருத்துவ முதல்வா். பரிமளாதேவி, செயற்பொறியாளா் திரு.பழனிச்சாமி, உதவி செயற்பொறியாளா்கள் திரு.மணிவண்ணன, திரு.தேவேந்திரன் , ஒன்றியக்குழு உறுப்பினா் திருமதி.தமிழ்ச்செல்வி, நகா்மன்றத துணைத் தலைவா் திரு.சேட் என்ற அப்துல்ரகுமான், நகா்மன்ற உறுப்பினா்கள் திரு.பாஸ்கா், திரு.அய்யப்பன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிகள் மற்றும் அரசு அலுவலா்கள் பலா் உடனிருந்தனா்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், புதுக்கோட்டை.**